**<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம்</u>**

**<u>விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்</u>**

**MCOP.No:** 210/2021 நாள் 16.11.2024

ம.சா.1, திருமதி.முருகேஸ்வரி,

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் 2ம்எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–**

விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலத்தில் நான் விபத்தை நேரடியாக பார்த்ததாக கூறியுள்ளது சட்டப்படி ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. விபத்து சமயம் எனது கணவருக்கு 50 வயது என்றால் சரிதான். எனது கணவர் விபத்து சமயம் எந்த தீப்பெட்டி ஆலையில் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் நைனா தீப்பெட்டி ஆலையில் வேலை பார்த்தார். மேற்படி விபரம் மனுவிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லப்படவில்லை என்றால் சரிதான். விபத்து சமயம் எனது கணவர் மாதம் ரூ.30,000/– சம்பளம் பெற்றுவந்ததை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால்சரிதான். விபத்து சமயத்தில் TN 84 F 3332 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தில் எனது கணவர் மற்றும் சௌந்தரபாண்டியன், தங்கவேல் ஆகிய மூவரும் மேட்டார் வாகன சட்டத்தை மீறி பயணித்ததால் எனது கணவர் பகரபொறுப்பாளர் என்றாலும் தீர்ப்புத் தொகையில் மேற்படி காரணத்திற்காக 15 % குறைக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 16th day of November 2024.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.**

**கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**